**செய்தி வெளியீடு எண்: 762** **நாள்: 07.11.2019**

**<u>இன்று (7.11.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்திய Connect 2019 மாநாட்டை துவக்கி வைத்து ஆற்றிய விழாப் பேருரை</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்திய தொழில் கூட்டமைப்பும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்தும் 18வது Connect-2019 மாநாட்டினை இன்று துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவிலே கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் **திரு.ஆர்.பி.உதயகுமார்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தகவல் தொழில்நுட்பவியல் துறையின் முதன்மைச் செயலாளர் **டாக்டர்.சந்தோஷ்பாபு, இ.ஆ.ப.,** அவர்களே!

இந்த நிகழ்ச்சியை சீரும், சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற Chairman, CII Southern Region **Mr. Sanjay Jayavarthanavelu** அவர்களே!

Chairman, CII Tamil Nadu **Mr. S.Chandramohan** அவர்களே!

Chairman, CII Connect 2019 **Mr. Suresh Raman** அவர்களே!

Director, Software Technology Parks of India, Chennai Region
**Dr. Sanjay Tyagi** அவர்களே!

Captains of Industries,
Delegates and other Dignitaries,
Friends from the Press and Media and
Other Delegates,

**உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.**

பல்வேறு நேர்வுகளில் கொள்கைகளை வகுத்தல், வகுக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப முடிவுகளை மேற்கொள்ளுதல், தொழில் வளர்ச்சிக்கு உதவி பொருளாதாரத்தை உயர்த்துதல், பொது மக்களுக்கு பல்வேறு சேவைகளை அளித்தல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், கோப்புகளைக் கையாளுதல் மற்றும் சட்டம் ஒழுங்கினை பராமரித்தல் ஆகியவை ஒரு அரசின் செயல்பாடுகளில் முக்கியமானதாகும். ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் பயன்பாடு திறம்பட செயல்படுவதுடன், குடிமக்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தும் வகையில் பிரமிக்கத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும், முகமையும் மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகள் நல்ல பலனை தந்துள்ளன. பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்குச் சான்றாக, நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் அதிக புதுமைகளைப் படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பெற்றுள்ளது. கடந்த கால சாதனைகளை நினைவுகூர்ந்திடவும், வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் சாதனைகள் பல புரியவும் இந்த மாநாடு ஒரு நல்ல வழிகாட்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு 2001–ஆம் ஆண்டு முதல் இணைந்து நடத்தி வரும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக Connect மாநாடு திகழ்கிறது. தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் குறித்து நடத்தப்படும் இந்த வருடாந்திர மாநாடு மற்றும் கண்காட்சி தமிழ்நாட்டை உலகளாவிய ICT வரைபடத்தில் இடம் பெறச் செய்துள்ளது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2001ல் Connect-ன் முதற் பதிப்பை தொடங்கி வைத்தார்கள். மேலும் 2002, 2005 மற்றும் 2011–ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற

நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்து கொண்டு பெருமை சேர்த்தார்கள்.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும், மாண்புமிகு அம்மா அரசின் சார்பில் சென்ற ஆண்டு நடத்தப்பட்ட Connect 2018 நிறைவு நாள் நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு உரையாற்றினேன் என்பதை இங்கே பெருமையுடன் சொல்ல விரும்புகிறேன்.

In my address in 2018 meet, I made an appeal to the Captains of Industry who were present, to extend continued support by way of fresh investments in Tamil Nadu. In response to my appeal, Tamil Nadu has already received 6,500 crore rupees as investments in the last one year. This has resulted in 60,100 new employments in Tamil Nadu. IT/ITeS sector exports have increased nearly 10 per cent and employment has increased by 4 per cent in the last one year, for which I thank Captains of the Industry. I request you to continue the same support in future also.

இந்த ஆண்டில் நடைபெறும் 18வது பதிப்பான இந்த மாநாட்டின் மையப் பொருள் ‘‘இந்தியா 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கு இதயமாக இருப்பது தொழில்நுட்பம்’’ என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது தற்போதைய சூழலில் மிகவும் பொருத்தமானதாகும். இதற்காக இம்மாநாட்டு அமைப்பாளர்களை நான் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த ஆண்டின் துவக்கத்தில், நான், இந்த மாநாட்டின் மையப் பொருளின் அடிப்படையில், ஏற்கனவே சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ்,

- ‘‘தேசிய மின் ஆளுமைப் பிரிவின் உதவியோடு திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு தொழில்நுட்பத்துடன் கூடிய **கட்டுப்பாடு மற்றும் கட்டளை மையம்** ஒன்று நிறுவப்படும் என்றும்;
- அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் சேவைகளை வெளிப்படைத் தன்மையுடன் செம்மையாக பெறும் பொருட்டு, **மாநில குடும்ப தகவல் தொகுப்பு** (State Family Database) ஒன்று உருவாக்கப்படும் என்றும்;

- வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பங்களில் ஒன்றான நம்பிக்கை இணையம் (Blockchain) மூலம் பரிவர்த்தனைகளில் உள்ள உண்மைத் தன்மையினை அறிந்திடும் வகையில் **நம்பிக்கை இணைய கட்டமைப்பு** ஒன்று அமைக்கப்பட்டு, அரசின் தரவுகள் அனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்படும் என்றும்;
- **"மக்களைத் தேடி அரசு"** என்ற திட்டத்தில் சட்டப்படியான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் குடிமக்கள் பெட்டகத்திலிருந்து விண்ணப்பிக்காமல் தானாகவே வழங்கப்படும்''

என்ற அறிவிப்புகளை அறிவித்து அதனை செயலாக்கத்திற்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மக்கள் தங்களது எந்த ஒரு தேவைக்காகவும் அரசு அலுவலகத்திற்கு நேரில் செல்லாமல் தான் இருக்கும் இடத்திலிருந்தே அனைத்து சேவைகளையும் பெற வேண்டும் என்ற எனது கனவு நிறைவேறும்.

''**தமிழ்நாட்டில் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன. இந்த அரசும் ஆதரவாகவும், வகை செய்பவராகவும் செயல்படுவதில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. நாங்கள் முதலீட்டாளர்களை அரவணைக்கும் மனப்பான்மையுடன் இருக்கும் மாநிலமாக இருப்போம். தமிழ்நாடு வழங்குகின்ற மாநிலமாக இருக்கும்**'' என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் முதலீட்டாளர்களை இருகரம் நீட்டி வரவேற்கும் அரசாக செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே பெருமையுடன், மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு சாதித்துள்ள சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- சென்னை இன்று இந்தியாவின் SaaS Capital of India என்று கூறும் அளவிற்கு பல புதிய தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் தொடங்கப்பட்டு வருகின்றன. மிகப் பெரிய நிறுவனங்களும் தங்களுடைய கிளைகளை சென்னையில் திறந்துள்ளன. இதற்குக் காரணம் தமிழ்நாடு ஒரு அமைதியான மாநிலமாகவும், நவீன தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றுகின்ற

அளவிற்கு மனிதவள ஆற்றல் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. இங்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்துவிட்டு, திறமைமிக்க பொறியாளர்களாக வெளி வருகின்றனர்.

- முழுவதும் கணினிமயமாக்கப்பட்ட அரசு சேவைகளை குடிமக்கள் அரசு இ–சேவை மையங்கள் மூலமாகவோ அல்லது தங்கள் மேசைக் கணினி அல்லது திறன்பேசி வாயிலாகவோ தமது இருப்பிடத்திலிருந்தே பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- மாண்புமிகு அம்மா அவர்கள், 2 மற்றும் 3ஆம் நிலை பகுதிகளில் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு வியாபாரக் குறியீடாக ‘‘எல்கோசெஸ்’’ என பெயரிட்டார். இவை, தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதைச் சார்ந்த சேவைகளுக்கான முதலீடுகளை ஈர்க்கும் ஒரு சிறந்த இடமாகத் திகழ்கிறது.
- மாணாக்கர்கள் தகவல் தொழில்நுட்பவியலில் தங்களது திறமையை வளர்த்துக் கொள்வதற்காக விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 54 லட்சத்து 19 ஆயிரத்து 594 மடிக்கணினிகள் வழங்கப்பட்டு அறிவுபூர்வமான கல்வியை மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.
- தமிழ்நாட்டில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் அதிக அளவில் உருவாவதை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசு ICT-2018 கொள்கையை சென்ற ஆண்டு வெளியிட்டுள்ளது. இதில் 2 மற்றும் 3ஆம் நிலை பகுதிகளில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கான பல சலுகைகள் அறிவிக்கப்பட்டு உள்ளன.
- மாநிலத்தில் புதுமையான சூழல் அமைப்பு உருவாவதை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு தொழில் முனைவோர் மற்றும் கண்டுபிடிப்புக் கொள்கை, 2018 வெளியிடப்பட்டு உள்ளது.
- Tamil Nadu Government would be releasing the Electronics Hardware Manufacturing Policy, shortly. This New Policy would enable new

start-ups, Companies which would bring lot of investments and lot of jobs and contribute largely to the economic development of the State.

- 2018–19–ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி 1 லட்சத்து 22 ஆயிரத்து 899 கோடி ரூபாயாகும். இதனால் 6 லட்சத்து 50 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வேலை வாய்ப்பில் தமிழ்நாடு, இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
- மாண்புமிகு அம்மாவின் கனவுத் திட்டமான குறைந்த விலையில் உயர்தர கேபிள் சேவைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 130 ரூபாயில் 200 சேனல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 26 லட்சத்து 36 ஆயிரத்து 820 சந்தாதாரர்களுக்கு செட்டாப் பாக்ஸ்கள் விலையின்றி வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு முழுவதும் தற்போது 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இ–சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் பல்வேறு துறைகளின் 120க்கும் மேற்பட்ட சேவைகளை வழங்கி வருகிறது. இதுவரை 4 கோடியே 81 லட்சம் மக்கள் இதன் மூலம் பயன் பெற்றுள்ளனர்.
- அனைவருக்கும் வளர்ச்சி என்ற எண்ணத்தை ஈடேற்றிட இல்லந்தோறும் இணையம் என்ற கொள்கையை செயல்படுத்தும் வண்ணம், அரசின் அனைத்து சேவைகளையும் கிராம மக்களும் அடையும் வகையில், அனைத்து கிராம ஊராட்சிகளும், பாரத்நெட் திட்டத்தை ரூபாய் 1,815 கோடி செலவில் தமிழ்நாட்டில் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும், கண்ணாடி இழை கட்டமைப்பு மூலம் இணைக்கப்படும். இதன் மூலம் அனைத்து கிராமங்களுக்கும் 1 Gbps அளவிற்கு குறையாமல் இணையதள வசதி வழங்கப்படும். இத்துடன் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் தமிழ்நெட் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நகரப் பகுதிகளுக்கும் அதிவேக இணையதள வசதி விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டங்கள் அடுத்த 18 மாதங்களுக்குள் நிறைவேற்றப்பட உள்ளன.

தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முதலீடுகளை அதிகரிக்கும் வழிமுறைகள், நிறுவனங்களின் நிதி நிலைமையை சீராக்கம் செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல், அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கான கருத்துருக்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு கருத்தியல்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதித்து, தகவல் தொழில்நுட்பவியல் துறை மேலும் வளர்வதற்காகு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

I take this opportunity to appeal to everybody present here, to extend your cooperation in establishing new IT Industries in emerging technologies like Blockchain, Artificial Intelligence etc., and thereby increase employment opportunity to every family and provide efficient services to every citizen of Tamil Nadu.

இங்கு வருகை தந்த அனைத்து பிரதிநிதிகளுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு, இந்த மாநாடு வெற்றி பெற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**